பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 61331 ★ சிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 29 (15—11—71) திங்கள் வெளியூர்: ஐப்பசி 30 (16—11—71) செவ்வாய் [இதழ்: 127

'கழகக் கூட்டணி பக்கமே மக்கள் உள்ளனர்'

'சுயேச்சைக்கு இடமில்லை என்பதை மீண்டும் மெய்ப்பித்து விட்டனர்'

'வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் நன்றி'-- பொதுச்செயலாளர் நாவலர் அறிக்கை

பொள்ளாச்சி இடைத் தேர்தல் வெற்றிச்செய்தியறிந்ததும், கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில், தி.மு. கழக வேட்பாளர் தோழர் மோகன்ராஜ் அவர்கள் மகத்தான வெற்றியைப் பெற்றிருப்பது அறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

"அந்த மாபெரும் வெற்றிக்கு ஒத்துழைப்பு நல்கி ஆதரவு தந்த தோழமைக் கட்சியினருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பாளர்கட்கும் -- காப்பாளர்கட்கும் என் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இந்தத் தேர்தல் முடிவு, பொது மக்கள், பொதுவாக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் கருத்துக்களின் பக்கமும் -- குறிப்பாகத் தி.மு. கழகத்தின் முற்போக்குத் திட்டங்களின் பக்கமும் இருக்கின்றார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக நாட்டுக்கு உணர்த்தியிருக்கிறது.

"முற்போக்குக் கொள்கைகள் பக்கம்தான் நாங்கள் இருப்போம் என்பதைக் காட்டிக் கொண்டுள்ள பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நாடாளுமன்ற சனநாயக ஆட்சி முறையில் சுயேச்சைகளுக்கு இடமில்லை என்பதை, சென்ற பொதுத் தேர்தல் வெளிப்படுத்திக்காட்டியது போல், இந்த இடைத் தேர்தலும் தெளிவுபடுத்தியிருப்பது மிகவும் போற்றுதற்குரியது.

"இந்த இடைத் தேர்தலில் அரும் பணியாற்றிய அன்பர்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

அமைச்சர் சத்தியவாணிமுத்து அந்தமான் பயணம்

சென்னை, நவ. 15—

அரிசன நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், நேற்று அந்தமான் செல்லும் வழியில் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அந்தமானில் இலங்கை அகதிகளைக் குடியமர்த்தும் சாத்தியக் கூறுகள்பற்றி ஆராய்வதற்காக 24-ம் நாள்வரை அங்கு சுற்றுப்பயணம் செய்வார்; 25 ம் நாள் சென்னை திரும்புவார்.

அகதிகள் நிலை-- ஆராய்ந்தறிவதற்கு அமெரிக்கக் 'கமிஷன்'

நியூயார்க், நவ. 15—

பாகிஸ்தானிலும் -- இந்தியாவிலும் சுற்றுப்பயணம் செய்ய 6-பேர் கொண்ட 'கமிஷன்' ஒன்றை அமெரிக்க அதிபர் நிக்சன் நியமித்திருப்பதாக ஐ. நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் 'கமிஷன்' டிச. 11-ம் நாள் அமெரிக்காவிலிருந்து புறப்படும்; கிழக்கு வங்க அகதிகள் நிலைமையை ஆராய்ந்தறியும்.

பயன்படாத தளவாடங்கள்

பாகிஸ்தானுக்கு விற்பனை?

திடுக்கிடும் தகவல்கள்

இலண்டன், நவ. 15—

"ஜெர்மன் இராணுவத்தால், 'பயன்படாதது' என்று ஒதுக்கப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான பவுன்கள் பெறுமானமுள்ள அமெரிக்க இராணுவத் தளவாடங்கள், அசல் போர்ச் சாதனங்கள்போல் பாகிஸ்தான் --இரான் போன்ற நாடுகளுக்கு விற்கப்பட்டிருக்கிறது"

என்று இலண்டன் 'டெயிலி டெலிகிராப்' பத்திரிகை திடுக்கிடும் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

மேற்கு ஜெர்மனியிலுள்ள சில கீழ்மட்ட இராணுவ அதிகாரிகள், ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யும் ஒரு நிறுவனத்துடன் கூடிக்கொண்டு கள்ளத்தனமாக இந்தப் பேரத்தை நடத்தியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

இதுபற்றி மேற்கு ஜெர்மன் அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள்.

கலைஞர் கணிப்புக்கே வெற்றி

'பொள்ளாச்சி என்றும் கழகக் கோட்டையே' என்பது உறுதியாயிற்று

1,24,164 வாக்குகள் வித்தியாசத்தில் ஊத்துக்குளி மோகன்ராசு வெற்றி

சிண்டிகேட்--சுதந்தரா ஆதரவு சுயேச்சை படுதோல்வி கண்ட பரிதாபம்

சென்னை, நவ. 15

எதிர்பார்த்தவாறே பொள்ளாச்சி இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 1,24,164 வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது.

சிண்டிகேட் – சுதந்தரா பிற்போக்கு அணியின் துணையோடு போட்டியிட்ட சுயேச்சை 51,394 வாக்குகள் மட்டுமே பெற்றுப் படுதோல்வியடைந்திருக்கிறார்.

கழக வேட்பாளரான தோழர் மோகன்ராசு 1 75 578 வாக்குகள் பெற்று வெற்றி வாகை சூடியிருக்கிறார்.

மற்றொரு சுயேச்சையான அங்கண்ண செட்டியார் என்பவர் 2 720 வாக்குகள் மட்டுமே பெற்றுப் பொறுப்புத் தொகையையும் பறிகொடுத்திருக்கிறார்.

பொள்ளாச்சித் தொகுதியின் மொத்த வாக்காளர் தொகை 6,05,642 ஆகும்.

இடைத் தேர்தலில் வாக்களித்தவர்கள் 2,36,256 பேர்.

செல்லாத வாக்குகள் 6,564 ஆகும்.

நமது கழக வேட்பாளருக்கு ஆதரவாக இந்திரா காங்கிரசு -- வலது கம்யூனிஸ்டு -- முஸ்லிம் லீக் -- தமிழரசுக் கழகம் ஆகிய கட்சிகள் பணியாற்றின.

சுயேச்சையான கிருஷ்ணசாமி கவுண்டரை ஆதரித்து சிண்டிகேட் காங்கிரசும், சுதந்தரா ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தீவிரமாகப் பணியாற்றினர்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், தாம் அமெரிக்காவுக்குப் புறப்படுமுன் செய்தியாளர்களிடம் பொள்ளாச்சித் தேர்தல் நிலவரம் குறித்துக் கருத்தறிவிக்கையில், 'பொள்ளாச்சி நாகர்கோவில் அல்ல -- கிருஷ்ணகிரி' என்று கூறியது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது; கலைஞரின் கணிப்புக்குப் பொள்ளாச்சித் தேர்தல் முடிவு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

கலைஞருக்குத் தந்தி மூலம் செய்தி

பொள்ளாச்சித் தொகுதி வெற்றிச் செய்தியை, அமெரிக்காவிலுள்ள கழகத் தலைவர் கலைஞர் அவர்கட்கு அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள் தந்தி மூலம் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் கழகத்திற்குக் கிடைத்த வாக்குகள் விவரமும் அந்தத் தந்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

லிங்கன் பரிசு பெறும் தொகுதி

"எந்தச் சட்டமன்றத் தொகுதி, கழக வேட்பாளருக்கு கூடுதலான வாக்குகளைப் பெற்றுத் தருகிறதோ அந்தத் தொகுதிக்கு அமெரிக்காவிலிருந்து ஆபிரகாம் லிங்கன் சிலையை வாங்கிவந்து பரிசாக அளிப்பேன்" என்று கலைஞர் அறிவித்திருந்தது நினைவிருக்கலாம்.

அந்தப் பரிசைப் பெறும் வாய்ப்பு கிணத்துக்கடவுத் தொகுதிக்குக் கிட்டியுள்ளது, அந்தத் தொகுதியில்தான் மிக அதிகமான வாக்குகள் (38,656) கழக வேட்பாளருக்குக் கிடைத்தன.

இந்தத் தொகுதி அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்களின் தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

நெய்வேலியில் கலெக்டர் தடையுத்தரவு

நெய்வேலி, நவ. 15—

நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிக் கார்ப்பரேஷன் பகுதியிலும் -- அதைச் சுற்றியுள்ள மூன்று மைல் சுற்றளவுப் பகுதியிலும் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

7-நாட்களுக்கு நடைமுறையில் இருக்கும் இந்த உத்தரவை, தென்னாற்காடு மாவட்டக் கலெக்டர் பிறப்பித்தார்.

இந்தத் தடையுத்தரவின்படி, தெருக்களில் ஐந்துக்கு மேற்பட்ட நபர்கள் கூடிப் பேசுவதோ, பொதுக்கூட்டங்கள் -- ஊர்வலங்கள் நடத்துவதோ தடை செய்யப்படுகிறது.

இந்தியா--சீனு நட்புறவு

தலைமையமைச்சர் இந்திராவுக்கு சூ--யென்--லாய் கடிதம்

புதுடில்லி, நவ. 15—

உலக நாடுகள் (ஐ. நா) சபையில் செஞ்சீனாவும் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டிருப்பதற்கு வாழ்த்துத் தெரிவித்துச் சீனத் தலைமையமைச்சர் சூ -- யென் -- லாய்க்கு, தலைமையமைச்சர் இந்திரா காந்தி தந்திமூலம் ஒரு செய்தி அனுப்பியிருந்தார்; அதற்கு நன்றி தெரிவித்து சூ -- யென் -- லாய் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்; அதில் கூறப்பட்டிருப்பதாவது:—

"உங்கள் வாழ்த்துச் செய்தி கிடைத்தது; ஐ நா. சபையில் சீனாவைச் சேர்க்கவும் -- தைவானை வெளியேற்றவும் இந்தியா ஆதரவு தெரிவித்ததற்குச் சீன அரசாங்கத்தின் சார்பிலும் -- மக்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

"இந்தியா—சீனா நட்புறவு நாளுக்கு நாள் வளரும் என்று நம்புகிறேன்."

பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியத் தலைமையமைச்சர் ஒருவருக்கு சீனத் தலைமையமைச்சர்

(5-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடிதம் எழுதியிருப்பது முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

கடந்த ஜூலை மாதம் அகதிகள் பிரச்சினை குறித்து விளக்கிச் சீனத் தலைமையமைச்சருக்கு இந்திரா காந்தி ஒரு கடிதம் எழுதியிருந்தார்; அதற்கு சீனாவிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை.

வங்க தேசப் பிரச்சினையின் ஆணி வேர்

'உண்மை நிலையை உலக நாடுகளின் தலைவர்கள் நன்கு உணர்ந்தனர்'

'கிழக்கு வங்க அகதிகளை இங்கேயே வைத்துக் கொள்ளுவதற்கு நியாயம் ஏதும் இல்லை'

தலைமையமைச்சர் இந்திரா காந்தி கருத்து விளக்கம்

புதுடில்லி, நவ. 15

"போர் இல்லாமல் வங்க தேசப் பிரச்சினை தீருமா என்பது பற்றி நான் மட்டுமன்றி நான் சந்தித்த உலக நாடுகளின் தலைவர்களும் கவலை கொண்டிருக்கின்றனர்" என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"கிழக்கு வங்கத்திலிருந்து உயிருக்குப் பயந்த ஓடிவந்துள்ளவர்கள், தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் செல்லவேண்டும்; அவர்கள் இந்துவாலும் சரி -- மற்றவர்களாக இருந்தாலும் சரி -- அவர்களை இங்கே வைத்துக்கொள்ளும் பேச்சே கிடையாது" என்று அவர் திட்டவட்டமாக அறிவித்தார்.

ஆறு ஐரோப்பியத் தலைநகரங்களுக்கும் -- அமெரிக்காவுக்கும் சென்று அரசுகளின் தலைவர்களைச் சந்தித்து வங்க தேசப் பிரச்சினையின் சிக்கலை விளக்கிவிட்டுத் தாயகம் திரும்பிய தலைமையமைச்சர் இந்திரா காந்தியை, செய்தியாளர்கள் சந்தித்துக் கேட்ட கேள்விகளின் முக்கியப் பகுதி இங்கு தரப்படுகிறது :--

கேள்வி :--"உலகத் தலைவர்களுடன் நீங்கள் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பலனாக, வங்க தேசப் பிரச்சினையைப் போர் இல்லாமலே தீர்க்க முடியும் என்று நினைக்கிறீர்களா ?"

பதில் :--"இதைப் பற்றித்தான் எல்லோருமே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்."

கேள்வி :--"பெரிய வல்லரசுகள் இப்பிரச்சினையில் தலையிடும் என்று நினைக்கிறீர்களா ?"

பதில் :--"நிலைமையைப் பற்றிய நமது மதிப்பீட்டை அவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்; அவர்களும் தங்களால் இயன்றதைச் செய்வார்களென்று நம்புகிறேன்; ஆனால், அது எவ்வளவு பலனளிப்பதாக இருக்கும் என்று நான் சொல்ல முடியாது."

கேள்வி :--"அகதிகள் திரும்புவது பற்றிய நடைமுறைகள் விவாதிக்கப்பட்டனவா ?"

பதில் :--"இல்லை."

கேள்வி :--"எல்லைப்புறத்தில் இப்போதுள்ள நிலைமை அதிகக் காலம் நீடிப்பதை அனுமதிக்க முடியாதென்று நீங்கள் சொன்னதாக..."

பதில் :--"பதட்ட நிலை நீடித்துக் கொண்டேபோனால் சகிக்க முடியாமற்தானே போகும் ?"

கேள்வி :--"கிழக்கு வங்காள மக்கள் இந்தியாவுடன் சேர வேண்டுமா என்பது, அவர்கள் முடிவு செய்யவேண்டிய விஷயம் என்று நீங்கள் சொன்னீர்களே ?"

பதில் :--"இல்லையே இல்லை; அம்மாதிரி நான் எதுவும் சொல்லவே இல்லை."

கேள்வி :--"வங்காள தேச அகதிகளை நிரந்தரமாக வைத்துக்கொள்ள நட்ட ஈடு கொடுக்கப்பட்டால் இந்தியா ஏற்குமா ?"

தலைமையமைச்சர் :--"ஏற்கமாட்டோம்; இன்றைய நாட்டு மக்களே -- அதுவும் ஒரு கோடி பேர்களை இந்தியா ஏன் நிரந்தரமாக ஏற்கவேண்டும் ? ஏற்றுக்கொள்ளும்படி சொல்வதற்கு என்ன நியாயம் ?"

வெளிநாட்டு நிருபர் :--"அகதிகளில் பெரும்பாலோர் இந்துக்கள் என்பதால்........"

தலைமையமைச்சர் :--"கோரமானது :--"இந்தியா மத வேறுபாடற்ற நாடு; இந்து -- முஸ்லிம் என்ற வேற்றுமைக்கே இடமில்லை."

கேள்வி :--"கிழக்குப் பகுதியில் தான் உண்மையான போர் அபாயம் இருக்கிறதென்று சொன்னீர்களே -- அதைத் தெளிவுபடுத்த முடியுமா ?"

பதில் :--"உண்மையான பிரச்சினை, கிழக்குப் பகுதியில்தான் என்று சொன்னேன்; அதுதான் கிழக்கு வங்கப் பிரச்சினையின் ஆணிவேர். வங்க தேசப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலன்றிப் பதட்ட நிலை நீடிக்கும்; மேற்கு பகுதியில் நடப்பது கிழக்கு வங்க நிலைமையைப் பாதிக்கவில்லை."

நோயை அறிவிக்கும் ராடார் கருவி

ஜெர்மானிய விஞ்ஞானி கண்டுபிடிப்பு

புதுடில்லி, நவ. 15—

எதிரி விமானங்கள் தாக்க வரும்போது அவைகளின் வருகையை ராடார் சாதனங்கள் அறிவிக்கின்றன அல்லவா ? அதேபோன்று, இருதயத்தில் ஏற்படும் நோய்களைக் கண்டுபிடிக்க ஜெர்மானியர், ராடார் கருவி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்.

ஜூலிச் அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள அணுசக்தி மருந்து நிலையத்தில் பணிபுரியும் டாக்டர்களும்—பொறியர்களுமே இந்தக் கருவியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இவர்கள் இதற்காகக் கண்டுபிடித்துள்ள 'ஒளிக்கதிர் காமிரா' ஒரு புரட்சிகரமான சாதனம் என்றும் இருதய நோய்களைத் திட்டவட்டமாகக் கண்டுபிடிக்கக்கூடியது என்றும் கூறப்படுகிறது.

மூளை -- ஈரல் -- மூத்திரக்காய் ஆகியவைகள் வேலைசெய்வதில் கோளாறு ஏற்பட்டால் அதைக் கண்டுபிடிக்கவும் இந்த 'இருதய ராடார்' உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சேரி ஒழிப்புக்கு ரூ. 1.24 கோடி

பெங்களூர், நவ. 15—

"ரூ. 1.24 கோடி செலவில் சேரி ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகப் பெங்களூர் மாநகராட்சி அனுப்பிவைத்துள்ள திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது"

என்று மைசூர் கவர்னர் தர்மவீரா, செய்தியாளரிடம் கூறினார்.

பெங்களூரில் உள்ள நூற்றுக்கு மேற்பட்டுள்ள சேரிகளை அகற்றிவிட்டு, சுமார் 3,300 குடும்பத்துக்கு வீடுகள் கட்டித்தர இந்தத் திட்டம் வகை செய்கிறது.

இதற்கு ஆகும் செலவில் பாதியை ஏற்குமாறு மத்திய வீட்டு வசதித் துறையை, மைசூர் அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

அனுமதிபெற்ற புதிய நிறுவனங்கள்

புதுடில்லி, நவ. 13—

சென்ற அக்டோபர் திங்கள் முதல் மூன்று கிழமை காலத்தில் 28 தொழில் நிறுவனங்களுக்கு லைசென்சுகள் வழங்கப்பட்டன.

இதே காலத்தில் 41 முதல்கட்ட அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

4 நிறுவனங்களின் லைசென்சுகள் ரதது செய்யப்பட்டன; ஒரு நிறுவனத்தின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது.

மதுராந்தகம் -- சூரமங்கலம் நகராட்சிகளாகும்

மதுராந்தகம் -- சூரமங்கலம் ஆகிய பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருக்கிறது.

மதுராந்தகம் பேரூராட்சி செங்கற்பட்டு மாவட்டத்திலும், சூரமங்கலம் பேரூராட்சி சேலம் மாவட்டத்திலும் இருக்கின்றன.

நெருக்கடி நேரத்தில் நாடாளுமன்றக் கூட்டம்

இன்று தொடங்கியது --- ஐந்து வார காலம் நடைபெறக்கூடும்

முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்

புதுடில்லி, நவ. 15—

இந்தியா – பாகிஸ்தான் எல்லையில் போர் நடவடிக்கைகளில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ள இந்த நேரத்தில் நாடாளுமன்றக் கூட்டம் இன்று தொடங்கியது.

ஐந்து வார காலம் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத் தொடர், மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கக்கூடும்.

பாகிஸ்தானின் போர் மிரட்டலை மத்திய அரசு எவ்வாறு சமாளிக்கப்போகிறது என்பதை அறிந்துகொள்வதற்கு எல்லாக் கட்சியினரும் கவனஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்திருக்கின்றனர்; இதற்குப் பதிலளிக்கும் வகையில், எல்லை நெடுகிலும் பாகிஸ்தான் செய்துவரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியா மேற்கொண்டிருக்கின்ற எதிர் நடவடிக்கைகளை விளக்கிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெ ஜீவன்ராம் அறிக்கை ஒன்று வெளியிடுகிறார்.

எல்லைகளிலுள்ள நிலைமைகள் -- வெளிநாட்டுத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விவரங்கள் பற்றித் தலைமையமைச்சர் இந்திரா காந்தி, அறிக்கை ஒன்றை அவையில் தாக்கல் செய்வார்; இந்த அறிக்கை, இன்று அல்லது நாளை தாக்கல் செய்யப்படுகிறது.

நாடாளுமன்றக் கூட்டம் நடைபெறாத நேரத்தில் 13 அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன; அவற்றுக்கு இந்தக் கூட்டத் தொடரில் ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது; இதற்கான மசோதாக்கள் கொண்டுவந்து நிறைவேற்றப்படும்.

இரயில்--அஞ்சல் கட்டண உயர்வுகள்

இன்றுமுதல் நடைமுறைக்கு வந்துவிட்டன

வங்க தேச அகதிகளால் ஏற்பட்டுள்ள சுமையைச் சமாளிக்கக் கூடுதல் நிதி வசதிகள் திரட்ட ஏற்பாடு

புதுடில்லி, நவ. 15–

இரயில் கட்டணங்கள்மீது 5 சதவிகித தனி வரி -- அஞ்சல் கார்டுகள், பதிவு செய்யப்பட்ட செய்தித் பத்திரிகைகள் நீங்கலாக எல்லா அஞ்சல் பொருள்களுக்கும் (கவர், இன்லண்டு லெட்டர் ஆகியவை) மீது 5 காசு அதிக வரி (சர்சார்ஜ்)யும் இன்று முதல் நடைமுறைக்கு வருகின்றன; தந்தி மணியார்டருக்கும் இது பொருந்தும்.

செய்திப் பத்திரிகைகளுக்கு 2 காசு 'எக்சைஸ்' வரியும் இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது. (15,000-க்குக் குறைவான பிரதிகள் விற்பனையாகும் பத்திரிகைகளுக்கு இவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது).

உள்நாட்டு விமானப் பயணம்மீது 4 சதவிகித 'சர்சார்ஜ்' விதிக்கப்பட்டுள்ளது.

வங்காள தேச அகதிகள் வருகையால் ஏற்பட்டுள்ள பெரும் நிதிச் சுமையைச் சமாளிப்பதற்காகக் கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டும்பொருட்டு இந்தப் புதிய தீர்வைகள், அக்டோபர் 22-ந் தேதி குடியரசுத் தலைவர் பிறப்பித்த மூன்று அவசரச் சட்டங்கள்மூலம் அறிவிக்கப்பட்டன;

இவற்றின்மூலம் நடப்பு ஆண்டில் ரூ. 35 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இவை இடைக்காலத் தன்மை வாய்ந்தது என்று கூறப்படுகிறது.

மாநிலங்களும் இதுபோல நிதி வசதிகளைத் திரட்டி அகதி நிவாரணத்துக்கு ஒதுக்க ஒப்புக்கொண்டுள்ளன; வரிகள்மூலம் அவைகள் ரூ. 75 கோடிக்கு நிதி வசதிகளை எழுப்பும் என்று தெரிகிறது.

அஞ்சல் அட்டைகள் -- பதிவு செய்யப்பட்ட செய்தித் தாள்கள் நீங்கலாக எல்லாத் தபால் பொருட்கள்மீதும் கூடுதலாக 5 காசு 'ஸ்டாம்பு' ஒட்ட வேண்டும்; 'அகதிகள் நிவாரண வரி' என்ற சொற்களுடன் கூடிய 5 காசு 'ஸ்டாம்பு' ஒட்ட வேண்டும்.

ஒவ்வொரு மணியார்டருக்கும் கமிஷனுடனும் 5 காசு கூடுதலாக வசூலிக்கப்படும்; மணியார்டர் பாரத்தில் 5 காசு 'ஸ்டாம்பு' ஒட்டவேண்டியதில்லை.

அகதிகள் நிவாரண 'ஸ்டாம்பு' ஒட்டப்படாத இன்லண்டு லெட்டர் -- கவர் ஆகிய அஞ்சல் பொருட்களுக்கு இரட்டைக் கட்டணம் -- அதாவது 10 காசு வசூலிக்கப்படும்.

இந்தியா அடைக்கவேண்டிய கடன்- இன்னும் ரூ. 4,947.87 கோடி

புதுடில்லி, நவ. 15—

கடந்த இருபதாண்டுக்கு மேலாக இந்தியாவுக்கு உதவும் நாடுகளிடமிருந்து பெற்ற கடனை அடைக்கும் வகையில், இந்தியா இன்னும் ரூ. 4,947.87 கோடி கொடுக்க வேண்டியுள்ளது; 1971 ஏப்ரல் 30-வரை மொத்தம் ரூ. 6 749.02 கோடி இந்தியா கடன் பெற்றிருக்கிறது.

இந்த ஆண்டு ஏப்ரல்வரை, இந்தக் கடனைப் பயன்படுத்தி இந்தியா ரூ. 6,051.63 கோடிக்கு ஆர்டர்கள் கொடுத்தது; ஆனால் உள்ளபடியே பயன்படுத்தப்பட்டது குறைவு; அதாவது ரூ. 5,810 76 கோடிதான்.

அயல்நாட்டுச் செலாவணியாகத் திருப்பித் தரவேண்டிய கடன்கள் தொடர்பான தொகையே இது; பி. எல். 480 கடன் இதில் அடங்காது; அது வேறு வகைக் கடனாகும்.

இதுவரை இந்தியா, ரூ. 862.89 கோடி திருப்பித் தந்துள்ளது; வட்டியாக மட்டும் இதுவரை மொத்தம் ரூ. 707.19 கோடி கொடுத்துள்ளது.

இந்தியாவுக்கு மிக அதிக அளவில் கடன் கொடுத்துள்ள நாடு அமெரிக்காதான்; 1971 ஏப்ரல்வரை ரூ. 3,368.18 கோடி அமெரிக்காவிலிருந்து இந்தியா பெற்றுள்ளது.

தமிழ்நாட்டின் கோரிக்கை நிராகரிப்பு

பூச்சி மருந்துத் தெளிப்பு விமானங்களைத் தமிழகத்தில் வைப்பதற்கு மறுப்பு

சென்னை, நவ. 15—

விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் விமானங்களில் பாதி அளவு தமிழ்நாட்டில் இருக்க வேண்டும் என்ற தமிழ்நாட்டின் கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்துவிட்டது.

"நாட்டில் விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ளன; மொத்தப் பரப்பளவில் பாதி அளவு தமிழ்நாட்டில் இருப்பதால் அவ்வாறு விமானங்கள் சென்னையில் இருக்க வேண்டும்"

என்று தமிழ்நாடு கோரியதாக தமிழ்நாடு வேளாண்மைத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் தனியார் விமானங்களைக் கொண்டு பூச்சி மருந்து தெளிக்கப்படுவதாகவும், இவ்வாண்டில் பயிர்ப் பாதுகாப்பு திட்டத்துக்காக ரூ. 3 கோடிவரை செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நெற் கதிரடிக்கும் சிறிய இயந்திரம்

அமெரிக்க நிபுணர் உருவாக்கியிருக்கிறார்

சென்னை, நவ. 15—

அறுவடையான நெற்கதிர்களை அடிப்பதற்குப் பயன்படும் 'சிறிய இயந்திரம்' ஒன்றை ரிச்சர்ட்சன் என்னும் அமெரிக்க நிபுணர் கோயம்புத்தூரில் உருவாக்கியுள்ளார்.

அவர் உருவாக்கியுள்ள சிறிய இயந்திரத்தைக் கொண்டு 8 மணி நேரத்தில் சுமார் 4 டன் நெல்லைக் கதிரடிக்கலாம்.

அமெரிக்க உதவி நிறுவனத்தைச் சேர்ந்த அந்த நிபுணர், கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைக் கல்லூரியில் பணியாற்றி வருகிறார்.

கிண்டியில் விவசாயத் தொழில் கார்ப்பரேஷனின் பண்ணையில், இந்தச் சிறிய இயந்திரம் இயக்கிக் காட்டப்பட்டது.

"3 குதிரைச் சக்தி கொண்ட மின்சார மோட்டாரால் எளிதில் இயக்கக்கூடிய இந்த இயந்திரம், சிறு விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கும்" என்று அதிகாரி ஒருவர் கூறினார்.

மகளிர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லம்

புதிய கட்டடம் திறப்பு

சென்னை, நவ. 15—

அரசாங்க மகளிர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லமும் -- பெண் மீட்பு இல்லத்துக்குமான புதிய கட்டடத்தை, அரிசன நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் திறந்துவைத்தார்.

மயிலாப்பூர் கச்சேரி சாலையில் இயங்கிவந்த இந்த இல்லத்திற்குச் சுமார் 1.50 இலட்சம் செலவில் அரசினால் இவ்விடுதி கட்டப்பட்டதாகும்; இவ்விடுதியில் 100 பேர் தங்கலாம்.

புதிய விடுதியின் கட்டடத்தை அமைச்சர் திறந்துவைத்துப் பேசுகையில், நெறி தவறிய பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்க இந்த நிறுவனம் செய்துவரும் பணிகளைப் பாராட்டினார்.

போர் மூண்டால் அழிவுதான்!

கிழக்கு வங்கப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அவசியம்--பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் கருத்து

இலண்டன், நவ. 15--

"இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் கிழக்கும் பாகிஸ்தான் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தலைவர்களுடன் மேற்குப் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்; அதேபோல், இந்தியா–பாகிஸ்தான் இரு நாடுகளும்கூட்டப் பேச்சுக்கள் நடத்தி போர் மேகங்களை விலகச் செய்ய வேண்டும்.

"போர் ஒன்று ஏற்பட்டுவிட்டால், ஏற்கனவே உள்ள கொடுமையுடன் அதுவும் சேர்ந்து, இறுதியில் அழிவுக்கு வழி செய்துவிடும்"

என்று பிரிட்டிஷ் வெளியுறவு—காமன்வெல்த் அமைச்சர் சர். அலெக் டக்ளஸ் ஹியூம் கூறினார்.

மக்கள் சபையில் வெளிவிவகாரங்கள் பற்றி உரையாற்றிய அவர், இந்தியத் துணைக்கண்ட நிலைமை குறித்து விரிவாகப் பேசினார்; அவர் மேலும் கூறியதாவது :—

"இப்போது துணைக் கண்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் நமக்கு இரண்டு அம்ச அக்கறை உண்டு; ஒன்று--அகதிகள் நிவாரணம்; மற்றது -- அரசியல் தீர்வு.

அகதிகள் நிவாரணத்திற்கு நாம் கணிசமாக உதவி செய்துள்ளோம்; இதுவரை மொத்தம் 17 மிலியன் பவுன்கள் (ரூ. 29.60 கோடி) உதவி வழங்கியிருக்கிறோம்.

"போர் முஸ்தீபுபோல் இரு நாட்டின் படைகளும் எல்லையில் எதிரெதிராக நிற்கும் நிலையில், நிதானப் போக்கை வற்புறுத்துவது நமது கடமையாகும்.

'அரசியல் தீர்வு' ஒன்று ஏற்பட்டு அகதிகள் தங்கள் தாயகம் திரும்பினாலன்றி நெருக்கடி குறையாது.

இதற்கிடையில், எல்லையிலிருந்து இருதரப்பினரும் குறிப்பிட்ட தூரம்வரை படைகளை திரும்பச் செய்யலாம்.

ஐ. நா. பார்வையாளர்களை எல்லைப் பகுதியில்—இருதரப்பிலும்-- வைக்கலாம் என்று பாகிஸ்தான் யோசனை கூறியிருக்கிறது; 'அகதிகள் வருகை நிற்காமல் இன்னும் தொடர்ந்து நிகழும்போது இந்த யோசனைகளால் பலன் இராது; முதலில் அகதிகள் வருவது நிற்கட்டும்' என்கிறது இந்தியா.

'கிழக்கு வங்காள மக்கள் ஏற்கக் கூடிய ஒரு அரசியல் தீர்வு காண வேண்டும்' என்றுதான் நாம்கூற முடியும்; அதற்காக, 'கிழக்கு வங்காள மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான தலைவர்களுடன் பேச்சு நடத்துங்கள்' என்றுதான் யோசனை சொல்லலாம்; 'இன்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கூறி-- எந்தத் தீர்ப்பையும் நாம் திணிக்க முடியாது.

முஜிபுர் ரகிமானை விடுவிப்பது பாகிஸ்தான் அதிபரைப் பொறுத்ததாகும்; 'என்ன செய்ய வேண்டும் -- என்ன செய்யக் கூடாது' என்பதைப் பிற நாடுகள் கூறுவதில் பயனில்லை; அவர்களே முடிவு செய்ய வேண்டியதுதான்."

உருளைக் கிழங்கு செடிகளைத் தாக்கும் பூச்சிகளை ஒழிக்கப் புது மருந்து கண்டுபிடிப்பு

புதுடில்லி, நவ. 15—

உதகையிலுள்ள வேளாண்மைத் துறை விஞ்ஞானிகள், புதிய பூச்சி மருந்து ஒன்றைக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

இந்த மருந்து, உருளைக் கிழங்குச் செடிகளைத் தாக்கும் பூச்சிகளைக் கொல்லக்கூடியதாகும்.

உருளைக் கிழங்குகளைத் தாக்கும் பூச்சிகள் சில காலமாக அதிகரித்துவிட்டது என்றும், இதைத் தடுக்காவிட்டால் இன்னும் பத்து ஆண்டுகளில் உருளைக் கிழங்குச் செடிகளே இருக்காது என்றும் கருதப்பட்டது

இப்பொழுது புதிய மருந்து கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால், அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

மருத்துவமனையில் கழக தோழர்

செயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் உட்கோட்டை ஆ. கோ. இராகவன், உடல்நலக் குறைவால் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்; அவரை திரு. இரா. செழியன் எம்.பி. தஞ்சை மருத்துவமனையில் சென்று பார்த்து வந்தார்.

'தேசியமய'க் கொள்கையின் பேரால் மாநிலங்கள் அதிகாரம் பறிபோவதா?

செயல்திறனை வகுக்கும் கொள்கையிலும் உரிமையினை இழப்பது ஏற்புடையதுதானா?

மத்திய ஆதிக்கத்தின்கீழ் கட்டுப்படும் நிலைமையால் மக்களுக்கு நன்மை ஏதும் செய்ய இயலாது

எதிர்ப்பின் உண்மை நிலையை விளக்குகிறார் அமைச்சர் செ. மாதவன்

சென்னை, நவ. 15—

"'தேசிய மயம்' என்ற போர்வையில் மாநில அரசின் அதிகாரங்களைக் குறைத்து – மத்தியில் அதிகாரங்களைக் குவிக்கும் எந்த தேசியமயக் கொள்கையானாலும் அதனை ஏற்றுக்கொள்ள இயலாது.

"வங்கிகளை மத்திய அரசு தேசியமயமாக்கியது; அதனை தமிழக அரசு ஆதரித்தது! 'தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் செயல் திறனை வகுக்கும் கொள்கையில் மாநில அரசுக்கும் பங்கு கிடைக்க வேண்டும்' என்று நாங்கள் கூறினோம்; ஆனால் அந்த உரிமை மத்தியிலேயே வைத்துக் கொள்ளப்பட்டது! அதன் பலனாகத் தமிழ்நாட்டில் மக்களின் சேவையில் அக்கறை கொண்டிருந்த வங்கிகள்கூட, மத்திய ஆதிக்கத்தின்கீழ் கட்டுப்படும் நிலைமை ஏற்பட்டது; ஆகவே எதிர்பார்த்த நன்மை கிட்டவில்லை; அதனால்தான் டெல்லியின் ஆதிக்கத்திற்கு அதிகாரங்களைக் கொண்டு செல்லும் 'தேசியமய'த்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறோம்!"

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், தென்னிந்தியக் கைத்தறி நூல் வர்த்தகக் கழகத்தின் 8-வது ஆண்டுவிழாக் கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினார்.

துணி ஏற்றுமதி வர்த்தகத்தை மத்திய அரசை மேற்கொள்ளும் யோசனை பற்றி தெரிவிக்கப்பட்ட அச்சத்தைக் குறிப்பிட்டே மேற்கண்ட கருத்தை அமைச்சர் கூறினார்.

வர்த்தக கழகத் தலைவர் திரு. டி. என். கே. கோவிந்தராசன் தம்முடைய வரவேற்பு உரையில், 'மத்திய அரசு இதுபற்றி ஒரு முடிவு எடுக்கையில் சம்பந்தப்பட்ட வர்த்தகத் துறையினருடன் இதன் சாதக பாதகங்களைக் குறித்து நன்கு ஆலோசித்திருக்க வேண்டும்' என்றார்.

"தனியாரின் ஊக்கத்திற்கும் -- சிறப்புமிக்க சேவைக்கும் மதிப்புத் தராமல், வெளி மார்க்கெட் வர்த்தகங்களில் முக்கிய மாறுதல்களைச் செய்து விடுவதினால் காலாகாலமாகப் பல சிரமங்களை மேற்கொண்டு மேம்பாடு செய்யப்பட்டு வந்திருக்கின்ற ஏற்றுமதி வர்த்தகம் திடீரென்று பெருகிவிடப் போவதில்லை; அதற்கு மாறாக, அட்டை வீடுகள் மாதிரி ஏற்றுமதி குலைந்து போகவே செய்யும்" என்று அவர் கூறினார்.

புதிதாக வாங்கப்பட்ட நூல் பரிசோதனை இயந்திரம் ஒன்றை விழாவில், அமைச்சர் செ. மாதவன் அவர்கள் திறந்துவைத்தார்.

திரு. என். நாராயணசாமி நன்றி கூறினார்.

அகதிகளின் குழந்தைகட்குப் பால்

'காசா' தொண்டு நிறுவனத்தின் பணி

கல்கத்தா, நவ. 15—

'காசா' (சமுதாயப் பணி--துயர் துடைப்பு -- வளர்ச்சிக்கான கிறித்தவ நிலையம்), மேற்கு வங்கத்திலும் -- மேகாலயாவிலும் இருக்கும் கிழக்குப் பாகிஸ்தானி அகதிகள் குழந்தைகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும்--ஆக மொத்தம் 1,20,000 பேருக்கு இப்பொழுது ஒரு நாளுக்கு ஒரு கோப்பை பால் கொடுத்து வருகிறது.

சர்ச் ஓர்ல்டு சர்வீஸ் (சி. டபிள்யூ எஸ்.) என்ற அமெரிக்கத் தனியார் சமயக் குழு, இந்தப் பால் திட்டத்திற்குக் குறிப்பாக உதவி செய்து வந்திருக்கிறது; 'காசா'வுக்கு ஏழு இலட்சம் இராத்தலுக்குமேல் எடுத்த பால் தூளும் -- இலட்சக் கணக்கான தண்ணீர் சுத்திகரிப்பு மாத்திரைகளும் வழங்கியிருக்கிறது.

பால் திட்டமானது விரிந்துவரும் 'காசா'வின் பல துயர் துடைப்புப் பணிகளில் ஒன்று; மேற்கு வங்கத்திலும் -- மேகாலயாவிலும் பல மருத்துவமனைகளையும், ஊர் சுற்றி வரும் மருந்தகங்களையும் ஏற்படுத்தி நடத்திவருகிறது.

கூரை வேயும் பொருள்களும், துணிமணிகளும், உணவுப் பொருள்களும் அகதிகளுக்கு ஏராளமாக வழங்கியிருக்கிறது.

கூடுதலான அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர்கட்குப் பரிசு

மத்திய குடும்ப நலத் திட்டத் துறை அறிவிப்பு

புதுடில்லி, நவ. 15—

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை 1971—72-ஆம் ஆண்டில் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக மத்திய சுகாதார -- குடும்பக் கட்டுப்பாட்டு அமைச்சகம், மூன்று புதிய பரிசுகளை அறிவித்திருக்கிறது.

மிகவும் அதிகமான அறுவைச் சிகிச்சைகளையும், 'லூப்'கள் பொருத்துதலையும் செய்யும் மூன்று மருத்துவர்களுக்கு ரூ. 5,000 வீதம் பரிசளிக்கப்படும்.

இந்த மருத்துவர்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுவர் :—

ஒவ்வொரு நோயாளிகளிடமிருந்தும் கட்டணம் பெறும் தனித்துறை மருத்துவர்; ஒவ்வொரு நோயாளிக்கும் ஊதியம் பெறும் அரசாங்க மருத்துவர்; ஒவ்வொரு நோயாளிக்கும் தனியாக ஊதியம் பெறாத -- ஆனால் ஒரு குறிப்பிட்ட அளவு நோயாளிகளுக்கு மருத்துவம் செய்தே ஆகவேண்டிய அரசாங்க மருத்துவர்.

ரூ. 7,500—ரூ. 5,000—ரூ. 3,000 மதிப்புள்ள மூன்று பரிசுகள், சிறந்த பணியாற்றிய மூன்று மாவட்டக் குடும்பக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு அளிக்கப்படும்.

எல்லா வகையிலும் சிறந்த பணியாற்றிய மூன்று ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவ அதிகாரிகளுக்கு ரூ. 5,000—ரூ. 3,000—ரூ. 2,000 வீதம் பரிசளிக்கப்படும்.

மேற்கூறிய பரிசுகள், குறிப்பிட்ட இலக்கை எட்டுவதன்மூலம் நிர்ணயிக்கப்படும்.

குடும்பக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும், மருத்துவர்களும் பரிசு ஆண்டு முழுவதும் ஒரே நிலையத்தில் பணியாற்றி இருக்கவேண்டும்.

அறிஞர் அண்ணா படத் திறப்பு விழா

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுச் சார்பில், லெவிஞ்சிபுரம் கிளை நூலகத்தில் பேரறிஞர் அண்ணா படத் திறப்பு விழா 8—11—71 அன்று திரு. பொ. தங்கசாமி தலைமையில் நடைபெற்றது.

அண்ணா உருவப் படத்தை ஊராட்சிமன்ற உறுப்பினரும் இராஜகை தி. மு. க. அவைத் தலைவருமான திரு. ஆனந்தகேசரி திறந்து வைத்தார்.

விழாவில் திரு. வீராதாஸ், தங்கராஜ் மற்றும் பலர் பேசினர். அண்ணா உருவப் படத்தை திரு. செல்வவிநாயக தாஸ் அன்பளிப்பாக வழங்கினார்.

விழா இறுதியில் இனிப்பு வழங்கப்பட்டது.

நூலகர் அ. சேதுராமசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

சேலம் மாவட்ட சமக்காள நெசவாளர் முன்னேற்றச் சங்கம்

சேலம் மாவட்ட சமக்காள நெசவுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க அமைப்புக் கூட்டம் சேலம் நகராட்சிமன்றத் தலைவர் சி. பழனியப்பன் முன்னிலையிலும்— தொழிற்சங்கப் பிரமுகர் ஏ. ஆர். விஜயன் தலைமையிலும் நடைபெற்றது; அதுபோது கீழ்க்கண்ட நிர்வாகிகள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர்: எஸ். கே. ஜி. இராசன்; துணைத் தலைவர் : பி கோவிந்தன்; செயலாளர்: சுபாசு என்கிற ஜி. கே. கோவிந்தராசன் எம்.சி., துணைச் செயலாளர்கள் ; ஈ. மாரியப்பன், எல். ஏ. மாணிக்கம்; பொருளாளர் : எம், செம்மலை; மற்றும் 15 செயற்குழு உறுப்பினர்கள்.

கெங்கைகொண்டான் எம். ஜி. ஆர். மன்றம்

கெங்கைகொண்டான் எம். ஜி. ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்வு 7—11—71-ல் டி. மணி அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : செ. சுப்பராயன்; செயலாளர் : செ. சு. மணி; துணைச்செயலாளர் : மு. சுப்பிரமணியன்; பொருளாளர் : வெங்கடாசலம்; மேலவைப் பிரதிநிதி : வைத்திலிங்கம்; செயற்குழு உறுப்பினர்கள் : சம்பந்தம், பெருமாள், கலியமூர்த்தி, பிச்சப்பிள்ளை, பழனிவேல், சாமிநாதன், நாராயணசாமி, சந்தரகாசன், நாராயணசாமி.

திண்டுக்கல் எம்.ஜி.ஆர்.மன்றம்

திண்டுக்கல் எம். ஜி. ஆர். மன்ற முதலாவது ஆண்டு நிர்வாகிகள் தேர்தல், திரு. என். கோவிந்தராசு எம்.சி. தலைமையில் நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—தலைவர் : கு. நாராயணசாமி; துணைத் தலைவர் : கே. வீராசாமி; செயலாளர் : இரெ. சுப்புராயலு; துணைச்செயலாளர் : ஏ. சர்புதீன்; பொருளாளர் : பி. சுப்பிரமணி; அவைத் தலைவர் : எம். கிருஷ்ணமூர்த்தி; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

நவ. 16 : இராசபாளையம்—கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீரனூர், வேளானந்தல், செய்யானேரி, சென்னங்குப்பம், காட்டுமலையனூர், சூரியந்தாங்கல், அரும்பாக்கம், கலுங்கனேரி, பொலுக்குணம், காட்டுவேளானந்தல், கலுங்கனேரி, கோணலூர்—பொதுக்கூட்டம்.

நவ. 17 : கரிக்கலாம்பாடி, மாணுவரம், கணியம்பூண்டி, நாடழகானந்தல், கங்கமபட்டு, சாணிப்பூண்டி, ஏர்ப்பாக்கம், கொளத்தூர், இராசாந்தாங்கல், வயலூர், செமீன்கூடலூர், நீலாந்தாங்கல், ஆவூர், அனுக்கமலை, நெய்வாநத்தம், வேட்டவலம்—பொதுக்கூட்டம்.

நவ. 18 : ஒலப்பாடி, பன்னியூர், ஆங்குணம், சொரத்தூர், அகரம், வைப்பூர்.

செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் உண்டா?

விண்வெளி ஆராய்ச்சியில் புதியதோர் அத்தியாயம் துவங்குகிறது

அமெரிக்க விண்வெளிக் கப்பல் செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றுகிறது

25 கோடி மைலிலிருந்து தகவல்கள் கிடைக்கின்றன

கலிபோர்னியா, நவ. 15—

சுமார் ஐந்தரை மாதங்களுக்குமுன் செவ்வாய்க் கிரகத்தை நோக்கி அமெரிக்கா செலுத்திய 'மரைனர் -- 9' என்ற விண்வெளிக் கப்பல், நேற்று விடியற்காலை இந்திய நேரப்படி 5-45 மணிக்கு செவ்வாய் கிரகத்தைச் சுற்றிவரத் தொடங்கியது.

விண்வெளி ஆராய்ச்சியில் புதியதோர் அத்தியாத்தைத் துவக்கி வைக்கும் பெருமை இந்த 'மரைனர் -- 9'-ஐ சேர்ந்ததாக இருக்கும்.

சூரிய மண்டலத்தைச் சேர்ந்த மற்றொரு கிரகத்தை (செவ்வாயை) முதன் முதலாகச் சுற்றிவரும் செயற்கைக் கோள் இது தான்.

'மரைனர் -- 9' விண்வெளிக் கப்பலுக்கு உள்ளேயும் சரி--வெளியேயும் சரி--எல்லாம் திட்டமிட்டபடி இருந்துவருவதாகவும், சரிவர இயங்கிவருவதாகவும், கப்பலிலுள்ள எல்லாக் கருவிகளும் -- சாதனங்களும் எதிர்பார்த்தபடி சரியாக இயங்கிவருவதாகவும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

தரை நிலையத்தின் ரேடியோ தொடர்பு அற்றுப் போய்விட்டால்கூட, 'மரைனரி'லுள்ள டெலிவிஷன் காமிரா, தானே படம் எடுத்து அனுப்பி வைத்துக் கொண்டிருக்குமாம்.

இந்தக் கப்பல் செவ்வாய் கிரகத்தைச் சுற்றிவரும்போது, செவ்வாய்க்கும் — இதற்கும் மிகக் குறைவான தூரம் 1,280 கி.மீ. (800 மைல்) ஆக இருக்கும் வகையில் இதன் 'வலம் வரும் பாதை' அமைந்திருக்கும்.

செவ்வாய்க் கிரகத்தின் ஈர்ப்புச் சக்தியானது இந்தக் கப்பலை 'சுற்றிவரும் பாதை'யில் கொண்டுவந்துவிடும்; ஆகவே இதன் வேகம் குறைக்கப்பட்டது.

'ரெட்ரோ ராக்கெட்'டின் சக்தி 10 மோட்டார் எஞ்சினின் சக்திக்குச் சமமானதாகும்.

'ரெட்ரோ ராக்கெட்' 10 நிமிடங்கள் இயங்கியபின், 'மரைனர்-9' செவ்வாய்க் கிரகத்தின் பின்புறத்துக்குச் சென்றது; அப்போது அதனுடன் உலகிற்கு செய்தித் தொடர்பு அற்றுப் போய்விட்டிருந்தது.

செவ்வாய்க் கிரகத்தின் பின்புறத்திற்குப் போனபோது 'மரைனர்-9'-இன் சில கருவிகள் தானாகவே திசைமாற்றிப் பொருத்தியமைத்துக் கொண்டன; இந்த விண்வெளிக் கப்பல் சூரியனிடமிருந்து வெப்பச் சக்தியைப் பெற்று இயங்குவதற்கு வேண்டிய மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கருவிகள் அவை: சூரியனைப் பார்த்தாற்போல அவை திரும்பி அமைந்து கொண்டன.

'மரைனர்—9' செவ்வாயின் பின்புறத்திலிருந்து முன்புறத்துக்கு மீண்டும் வந்தது; அப்போது தான் அதனிடமிருந்து பூமிக்கு மீண்டும் தகவல் வரத் தொடங்கியது.

செவ்வாய்க் கிரகத்திலிருந்து ரேடியோ அலைகள்மூலம் பூமிக்குத் தகவல் வந்து சேர 6 நிமிடங்கள் ஆகின்றன.

'மரைனர்—9'-ல் 2 டெலிவிஷன் காமிராக்கள் மற்றும் ஒலிபரப்பு—ஒளிபரப்பு சாதனங்கள் உள்ளிட்ட பல விஞ்ஞானக் கருவிகள் உள்ளன.

இந்த விண்வெளிக் கப்பல் ஒரு நாளில் செவ்வாய்க் கிரகத்தை இருமுறை சுற்றிவரும்; 90 நாட்களுக்குக் குறையாமல் பூமிக்குத் தகவல்களை அனுப்பிவரும் முறையில் இது அமைக்கப்பட்டுள்ளது; ஆனால் ஓராண்டுக்காலம் வரைகூட இதனால் தகவல்கள் அனுப்பிவர முடியும்.

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம் இருக்கிறதா -- இல்லையா என்பதைக் கண்டறிந்து, தகவல் கொடுப்பதற்காக இது அனுப்பி வைக்கப்படவில்லை; ஆனால், உயிரினம் வாழக்கூடிய சூழ்நிலைகள் உள்ள பகுதிகள் இருந்தால் அவை எவை என்பதைத் திட்டவட்டமாகவே இது அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கப்பல், முதல் மூன்று மாத காலத்தில் செவ்வாய்க் கிரகத்தின் தரையில் 79 சதவிகிதத்தைப் படம் எடுத்து அனுப்பி வைக்கும்.

இரஷ்யா முயற்சி

இரஷ்யாவும் செவ்வாய்க் கிரகத்தை நோக்கி 'மார்ஸ—2'— 'மார்ஸ்—3' என்ற இரு விண்வெளிக் கப்பல்களை அனுப்பியுள்ளது; அவற்றைச் செவ்வாய்க் கிரகத்திலேயே இறக்க இரஷ்யா முயற்சிக்கக்கூடும்.

அந்த இரண்டு விண்வெளிக் கப்பலுக்கும் முன்னால் 'மரைனர்-9' செவ்வாய்கிரகத்தைச் சுற்றத் தொடங்கிவிட்டிருக்கிறது எனத் தோன்றுகிறது.

இரஷ்ய விண்வெளிக் கப்பல்கள் மே 19, 28 ஆகிய நாட்களில் அனுப்பிவைக்கப்பட்டன; அப்படியிருந்தும், அமெரிக்கக் கப்பல் முந்திக்கொண்டு போயிருப்பதற்குக் காரணம், இது பூமியிலிருந்து புறப்படும்போதே அதிக வேகத்துடன் சென்றது தான் என்று கூறப்படுகிறது.

அமெரிக்கக் கப்பலின் எடை 2,200 இராத்தல்; இரஷ்யக் கப்பல்கள் இதைப்போல சுமார் 5 மடங்கு எடையுள்ளவை.

25 கோடிமைல் பயணம்

'மரைனர்-9' விண்வெளிக் கப்பல் மே 30-ந் தேதியன்று செலுத்தப்பட்டது. 7 50 கோடி டாலர் செலவில் தயாரிக்கப்பட்ட இந்த விண்வெளிக் கப்பல் இந்த ஐந்தரை மாத காலத்தில் சுமார் 40 கோடி கிலோ மீட்டர் (25 கோடி மைல்) பயணம் செய்துள்ளது.

நேற்று அதிகாலை 5-34 மணிக்கு (இந்திய நேரப்படி) இதன் 'ரெட்ரோ ராக்கெட்' எஞ்சின் 13நிமிட நேரம் இயக்கப்பட்டது; இதன் வேகம், மணிக்கு 17,700 கிலோ மீட்டராக (11,062½ மைல்)க் குறைக்கப்பட்டது; அந்த வேகத்துக்குக் குறைக்கப்பட்டால்தான்

கலைஞருக்குக் கண் அறுவைசிகிச்சை

செவ்வாய்க்கிழமைவரை மருத்துவமனை விடுதியில் தங்கியிருப்பார்

வாஷிங்டன், நவ. 15—

தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு அமெரிக்காவில் பால்டிமோர் என்ற இடத்திலுள்ள 'ஹாப்கின்ஸ்' மருத்துவமனையில், இடது கண் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது; பின்பு அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

கண்ணில் ஏற்படும் எரிச்சலைப் போக்க சிறு அறுவை மருத்துவம் நேற்று நடைபெற்றது; கண் மருத்துவ நிபுணர் டாக்டர் மோமனி இந்த மருத்துவத்தைச் செய்தார்.

டாக்டர் யோசனைப்படி கலைஞர் இப்போது மருத்துவமனை விடுதியில் ஓய்வு எடுத்துவருகிறார்; உடல்நிலை நன்றாக உள்ளது.

செவ்வாய்க்கிழமைவரையில் அவர் மருத்துவமனையில் இருப்பார்; அதன்பிறகு தமது அமெரிக்கச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்வார்.

மருத்துவமனையில் கலைஞருடன் முரசொலி மாறன் இருந்துவருகிறார்; 'அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு நேற்று மாலை கலைஞர் சிற்றுண்டி அருந்தினார்' என்று முரசொலி மாறன் தொலைபேசிமூலம் சென்னைக்குத் தகவல் தெரிவித்தார்.

பூச்சிக்கொல்லி மருந்து

உற்பத்தி இரு மடங்காகப் பெருக்கம்

கடந்த ஐந்து ஆண்டுகளில் பூச்சிக் கொல்லி மருந்து உற்பத்தி இரு மடங்காகப் பெருகியிருக்கிறது.

உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள் 1970-ஆம் ஆண்டு 24,396 டன்கள் பூச்சு மருந்து உற்பத்தி செய்துள்ளனர்.

1965-ஆம் ஆண்டில் உற்பத்தி 12,185 டன்கள்தான்.

இந்த ஆண்டில் பூச்சி மருந்து தயாரிப்பு 28,000 டன்களுக்கும் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; நான்காவது திட்ட முடிவில் இது இரட்டிப்பாகப் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உடனடி நடவடிக்கை இப்போது இல்லை

நிர்ப்பந்தம் ஏற்பட்டால்தான் அவசரநிலைப் பிரகடனம்

நியாயத்தை உணர அவகாசம் தருவதால் நட்டம் ஒன்றும் ஏற்படப்போவதில்லை

மத்திய அமைச்சரவை அரசியல் விவகாரக் குழுவில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெளிவுரை

புதுடில்லி, நவ. 15—

தேசிய அவசர நிலையைப் பிரகடனம் செய்வது உட்பட முக்கிய முடிவுகள் பின்னர்தான் மேற்கொள்ளப்படும் என்று இப்போதைய நிலவரத்திலிருந்து தெரிகிறது; எனினும், பாகிஸ்தான் தன்னுடைய நடவடிக்கைகள் மூலம் நிர்ப்பந்தித்தால் அரசு அவசர நிலையைப் பிரகடனம் செய்யவேண்டி ஏற்படும் -- ஆக்கிரமிப்பை முறியடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வங்காள தேச அரசை அங்கீகரிப்பதுபற்றி அரசு இன்னும் முடிவு எதையும் மேற்கொள்ளவில்லை; இத்தகைய நடவடிக்கை உடனடியாக இராது; அடுத்த சில நாட்கள் அல்லது வாரங்கள் பொறுத்த பிறகுதான் இறுதி முடிவு மேற்கொள்ளப்படும்.

"வங்காள தேசப் பிரச்சினையில் பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் நியாயத்தை உணரும்படிச் செய்ய உலகத் தலைவர்கள் இறுதி முயற்சி செய்யும் பொருட்டு இன்னும் சிறிது காலம் இந்தியா காத்திருப்பதால் நட்டம் ஏற்பட்டுவிடாது"

என்று, தலைமையமைச்சர் இந்திரா காந்தி கருதுவதாகக் கூறப்படுகிறது; நேற்று தம்முடைய மூத்த சகாக்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இந்த எண்ணத்தை அவர் ஏற்படுத்தியதாகத் தெரிகிறது.

"உலகத் தலைவர்கள் தங்களுடைய முயற்சியில் தோற்றால், வங்காள தேசப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், நாட்டைப் பாதுகாப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்வது சரியே" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

வங்காள தேச நெருக்கடிபற்றி விளக்குவதற்காக ஐரோப்பாவிலும் -- அமெரிக்காவிலும் மூன்று வார காலம் சுற்றுப்பயணம் செய்ததால் ஏற்பட்ட எண்ணங்களை மத்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக் குழுவில் தலைமையமைச்சர் விளக்கிக் கூறினார்; கூட்டம் 90-நிமிடம் நடந்தது.

அரசியல் தீர்வுதான் வங்காள தேச மக்களுடைய துயரங்களுக்கு முடிவு கட்டும் -- என்று எல்லா நாடுகளிலும் தெளிவாக உணரப்பட்டிருப்பதாகத் தலைமையமைச்சர் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

இப்போதைய தற்கொலைக் கொள்கைகளை விட்டுவிட்டு, ஷேக் முஜிபுர் ரகிமானுடனும் -- அவாமி லீகின் மற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களைத் தொடங்கும்படி யாகியா கானை இணங்கவைக்க அமெரிக்கா உட்படப் பெரிய வல்லரசுகள் ஒப்புக் கொண்டதாகத் தலைமையமைச்சர் தெரிவித்தார்.

"யாகியா கானை இணங்க வைக்க உலகத் தலைவர்களுக்கு வாய்ப்புத் தரும் பொருட்டுச் சிறிது காத்திருந்தால் இந்தியாவுக்கு நட்டம் ஏற்பட்டுவிடாது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்குத் தொல்லை கொடுக்க பாகிஸ்தானின் முயற்சி

நாசவேலை செய்யும்படி கொரில்லாக்கள் அனுப்பப்படுகின்றனராம்

பாகிஸ்தான் தளபதியே வெளியிட்ட தகவல்

வாஷிங்டன், நவ. 15—

"கிழக்கு வங்காளத்தில் விடுதலைப் படையின் நடவடிக்கைகளுக்குப் பதிலடியாக இந்தியாவைத் துன்புறுத்தும் எண்ணத்துடன், பாகிஸ்தான், கொரில்லாக்களை இந்தியாவுக்கு அனுப்புகிறது!!"

என்று, கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள பாகிஸ்தான் இராணுவத் தளபதி லெப்டினன்ட்-ஜெனரல் அமீர் அப்துல்லாகான் நியாஜி தெரிவித்துள்ளார்.

வாஷிங்டன் 'ஈவினிங் ஸ்டார்' என்ற இதழின் செய்தியாளரான ஹென்ரி பிராட்ஷெருக்கு டாக்காவில் அளித்துள்ள பேட்டியில் அவர் இவ்வாறு கூறியுள்ளதாகச் செய்தித் தாள் தெரிவிக்கிறது.

இரசாக்கர்கள் கொண்ட மூன்று சிறப்புப் பிரிவுகளுக்குப் பயிற்சி அளித்திருப்பதாகவும், கிழக்கு வங்காளத்திலிருந்து இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்க ஆயுதங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் ஜெனரல் நியாஜி கூறியிருக்கிறார்.

அவர்கள் நாச வேலைக்காகவும், தாக்குதலுக்காக அனுப்பப்படுவதாகவும் கூறியுள்ளார்.

இந்தியாவில் இரண்டு இரயில்களைப் பாகிஸ்தான் ரஜாக்கர்கள் வெடி வைத்துத் தகர்த்தனர் என்பதையும் அவர் உறுதி செய்தார்.

தம்மிடமுள்ள 80,000 சிப்பாய்களால், இரண்டரை இலட்சம் இந்தியச் சிப்பாய்களைச் சமாளிக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்: ஆனால் சற்று யோசித்துவிட்டு, 'இந்தியாமீது சீனா நிர்ப்பந்தத்தைத் திணித்தால்தான்' என்று கூறினார்.

20 இலட்சம் பேர்கள்தானும்--- 2 இலட்சம் அகதிகள் திரும்பிவிட்டனராம்

இதற்கிடையில், கிழக்கு வங்காளத் தலைமைச் செயலாளர் முஜாபர் உசேன், இந்தியாவில் 20 இலட்சம் அகதிகள்தான் இருப்பதாகவும், அதில் ஏற்கனவே இரண்டு இலட்சம் பேர் திரும்பிவிட்டதாகவும் கூறினார்.

இந்தியாவில் 20 ஆண்டுகளாக அகதிகள் இருப்பதாகவும், அவர்கள் இப்போது கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள் இருப்பதாகக் கூறப்படும் முகாம்களில் வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] நாராயண செட்டி தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பட்டது.